ஆலந்தூர் 12வது மண்டலம் 166, 167 வார்டுக்கு உட்பட்ட பொது மக்களின் குறை கேட்டும் நிகழ்ச்சி நங்கநல்லூரில் நடந்தது. ஆலந்தூர் மண்டல குழு தலைவர் என்.சந்திரன் தலைமையிலும் வார்டு மாமன்ற உறுப்பினர் துர்காதேவி நடராஜன் முன்னிலையிலும் நடந்த இந்த நிகழ்ச்சியில் குறு, சிறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு மக்களின் குறைகளை கேட்டறிந்தார். இதில் மின்சாரம், குடிநீர், சாலை வசதி மழைநீர் கால்வாய் பணி போன்ற புகார்கள் குறித்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி அமைச்சர் தா.மோ.அன்பரசன் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். இதில் மண்டல உதவி ஆணையாளர் சீனிவாசன், மண்டல குடிநீர் பகுதி பொறியாளர் கல்யாணி, மின்வாரிய பகுதி பொறியாளர் கோவிந்தராஜ் மண்டல மாநகராட்சி செயற்பொறியாளர் உமாபதி, வட்ட தி.மு.க. செயலாளர்கள் ஜெ.நடராஜன், உலகநாதன், ஜேசுதாஸ் மற்றும் நலச் சங்க நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ. மற்றும் துணை அமைப்பாளர்கள் எம்.விநாயகமூர்த்தி, ச.சங்கர்கணேஷ், ஆர்.கிருஷ்ணகுமார், ஜெ.இ.பாண்டியன, கா.வீ.தியாகராஜன் செ.ரவி.எஸ்.பிரகாஷ் ஆகியோர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு த்துறை அமைச்சர்– மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியனைச் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்வதை யாராலும் தடுக்க முடியாது!

அனைத்து மாநிலங்களையும் மதிக்கும் ஆட்சி ஒன்றியத்திலே உருவாகும்!

சென்னை கிழக்கு மாவட்ட மகளிரணி சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

சென்னை, ஜூலை 13 - “அனைத்து மாநிலங்களையும் மதிக்கும் ஆட்சி ஒன்றியத்திலே உருவாகும்” என -சென்னை கிழக்கு மாவட்ட மகளிரணி சார்பில் நடைபெற்ற - கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு 08.07.2023 சனிக்கிழமையன்று, சென்னை, ஐ.சி.எப். அம்பேத்கர் அரங்கத்தில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிரணி சார்பில் “தாய்மனம் கொண்ட தலைவர் தமிழரின் இதயம் கலைஞர்” என்ற தலைப்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி சிறப்புரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

‘தாய்மனம் இல்லாத தலைவர் இருக்கிறார் என்றால் அந்த மனதில் இருந்து எழும் திட்டங்கள் மக்களைப் பற்றி அக்கறையுள்ள திட்டங்களாக இருக்க முடியாது. தாய்மனம் என்பது மக்களை நேசிக்கக் கூடிய மனம். அந்த மனம் இருந்ததால்தான் தந்தை பெரியார் மக்களைப் பற்றி கவலைப்பட்டார். மனிதநேயத்தோடு மனிதர்களுக்காக துடித்த அந்த மனம் இருந்ததால்தான் தந்தை பெரியார் அவர்கள் தன் வாழ்நாளெல்லாம் அரசியல் வாழ்க்கையை தேர்ந்தெடுக்காமல் பொது வாழ்க்கையை தேர்ந்தெடுத்து, உடல் நலம் இல்லாத கால கட்டத்திலும் வசை பாடினாலும், கை தட்டினாலும், பத்து பேர் கூடினாலும், பத்து லட்சம் பேர் கூடினாலும், ‘நான் உங்களிடம் பேசி உங்களை உயர்த்துவதற்காக வந்திருக்கிறேன்’ என்று தொடர்ந்து பயணம் செய்த அந்த தலைவனின் அடிப்படை தாய் மனம். அதன் நீட்சியாகத்தான் பேரறிஞர் அண்ணா, தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்கள்.

தமிழ் சமுதாயத்தை பாதுகாத்தவர்!

தலைவர் கலைஞருக்கு கோபம் வரச் செய்ய வேண்டும் என்றால் அவரது கொள்கைப் பிடிப்பை சற்று அசைத்துப் பார்க்க வேண்டும். அந்த கோபத்துக்கான, அந்த ரௌத்திரத்துக்கான காரணம், ‘என் மக்கள் மீது நீ கை வைக்கிறாய். என் மக்களின் எதிர்காலத்தோடு நீ விளையாடுகிறாய் என்ற அந்த கோபம். ஒரு தாய் எப்படி தன் குழந்தைகளைப் பாதுகாப்பாளோ இந்த தமிழ்ச் சமூகத்தை, இந்த தமிழ் மக்களை பாதுகாப்பதற்காகத்தான் அவர் பேசினார், எழுதினார். ஒவ்வொரு முறையும் அவர் பேனாவை கையில் எடுப்பது இந்த சமூகத்தை உய்விக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

முரசொலி என்ற பத்திரிகையை 13 வயதில் தொடங்கி அதை கையெழுத்துப் பிரதியாக நடத்தி தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றதற்குக் காரணம், கலைஞருக்கு இந்த சமூகத்தின் மீதிருந்த அக்கறை. அதுதான் தாய்மை. ஒவ்வொரு இடத்திலும் ஆட்சியின் உச்சி பீடத்தில் இருந்த காலகட்டத்தில் கூட மக்களிடம் இருந்து அவர் வேறுபட்டுப் போனதே கிடையாது. கட்சியில் இருக்கும் தோழர்களுக்கும் அவருக்கும் எந்த வித்தியாசமும் இருந்ததில்லை. அதுதான் அவரது தாய்மனம்.

தாய் மனம் கொண்டவர் கலைஞர்!

நமது பொதுச் செயலாளர் அடிக்கடி ஒரு சம்பவத்தைச் சொல்லுவார். கலைஞர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது ஒரு நாள் அறிவாலயத்திலே அமர்ந்திருந்தார். ஆட்சிப் பொறுப்பு என்றால் எவ்வளவு சவால்கள் நிறைந்தது! இன்று ஆளுநர் என்று ஒருவரை வைத்துக் கொண்டு என்னென்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும். அப்போது கலைஞர் ஆட்சிப் பொறுப்பிலே பல சவால்களை எதிர்கொண்டிருந்தார். அந்த நிலையில் அறிவாலயத்தில் அமர்ந்திருந்தபோது கட்சிக்காரர் ஒருவர் கலைஞரைச் சந்திக்க வந்தார். இருவரும் பேசிக் கொண்டிருக்க அது வாக்குவாதமாகிறது. ‘இனியும் உன்கூட பேச முடியாது. எந்திருச்சு போ’ என்று கோபத்தில் சொல்லிவிடுகிறார் தலைவர் கலைஞர். கொஞ்ச நேரத்தில் பொதுச் செயலாளரை அழைத்து, ‘துரை... நான் ரொம்ப கோபப்பட்டு பேசிட்டேன். அவன் அங்கதான் நிப்பான். நீ போய் கூட்டிட்டு வந்துடேன்’ என்று சொல்லியிருக்கிறார். ’அவன் போயிருப்பான். விடுங்களேன்’ என்று பொதுச் செயலாளர் சொல்ல, ‘இல்லய்யா... ஆட்டோவுக்கு பஸ்ஸுக்கு வெயிட் பண்ணிக்கிட்டு அங்கதான் நிப்பான். கொஞ்சம் போய் கூட்டிக்கிட்டு வா’ என்று மீண்டும் சொல்லியிருக்கிறார் தலைவர் கலைஞர்.சரி என்று வெளியே போய் தேடிப் பார்த்து அந்த உடன்பிறப்பை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார் பொதுச் செயலாளர். அந்த உடன்பிறப்பு உள்ளே வந்ததும். ‘என்னை மன்னித்துவிடு. நான் கோபப்பட்டு விட்டேன்’ என்று சொல்லக் கூடிய அளவுக்கு தாய் மனம் நிரம்பியவர் தலைவர் கலைஞர்.

அரசியல் தலைவர் என்றால் பெரும்பான்மை மக்களின் விருப்பங்களை அறிந்து அவர்களுக்காக சட்டங்கள், திட்டங்கள் போட வேண்டும் என்றும் அதுதான் வாக்கு வங்கி என்றும் சொல்லப்பட்டு வந்த நிலையில்... தலைவர் கலைஞர் அவர்கள் இந்தச் சமுதாயத்தில் யார் யாரெல்லாம் ஒதுக்கப்பட்டிருந்தார்களோ, யார் யாரெல்லாம் ஒடுக்கப்பட்டிருந்தார்களோ, இந்த சமூகம் யார் யார் மீதெல்லாம் அக்கறையில்லாமல்இருந்ததோ அவர்களைப் பற்றி கவலைப்பட்ட ஒரே தலைவர் கலைஞர்தான்.

ஒதுக்கப்பட்டவர்களுக்காக கவலைப்பட்டவர்!

இன்றைக்குத் தொழுநோய்க்கு மருந்துகள் வந்துவிட்டன. ஆனால் ஒரு காலத்தில் தொழுநோய் வந்துவிட்டால் அவர்களுக்கு அவர்களுடைய வீட்டிலேயே இருக்க வாய்ப்பிருக்காது. குடும்பத்தாரே ஒதுக்கி வைத்துவிடுவார்கள். அந்த குடும்பமே ஒதுக்கிவைக்கப்படும் அவல நிலையும் இருக்கிறது. அவர்கள் பெரும்பான்மை இல்லை. அவர்களைப் பற்றி யாரும் கவலைப்பட்டதில்லை. அவர்களுக்காக பரனூரிலே காப்பகத்தை உருவாக்கியவர் தலைவர் கலைஞர். நான் ஒரு முறை பரனூர் சென்றபோது அந்த இல்லத்தில் இருப்பவர்கள், ‘தலைவர் இல்லைன்னா நாங்க தெருவுல அனாதை பிணங்களாகத்தான் கிடந்திருப்போம். எங்களுக்குனு ஒரு வீடு எங்களுக்குனு ஒரு வாழ்க்கைனு சுயமரியாதையோடு வாழக் கூடிய நிலைமையை உருவாக்கினது தலைவர்தான்’ என்று என்னிடம் சொன்னார்கள். நான் உடனே தலைவர் கலைஞரை தொலைபேசியில் அழைத்தேன். என்னால் பேசக் கூடிய முடியவில்லை. ரொம்ப உணர்ச்சிவயப்பட்டு நான் அவரிடம் சொன்னேன், ‘நான் உங்க மகளாக பிறந்ததிலே மிகப் பெருமை அடைகிறேன்’ என்று சொன்னேன்.

அதேபோல இந்த சமூகத்திலே கிண்டலுக்கும் கேலிக்கும் அவமானங்களுக்கும் ஆளானவர்கள் தான் திருநங்கைகள். அவர்களை மதித்தவர்கள் யாரும் இல்லை. அவர்களின் பெற்றோர் குடும்பத்தினர் கூட அவரை வீட்டை விட்டு துரத்தி விட்டார்கள். அதனால் அந்த பிள்ளைகள் பள்ளிப் படிப்பை முடிக்க முடியாமல் வீட்டை விட்டு துரத்தி விடுவார்கள். தன் மனம் வேறு உடல்வேறு என்பது கூட புரியாமல் தவித்தார்கள். ஆபரேஷன் செய்து கொள்ள வேண்டுமென்றால் கூட எவ்வித மருத்துவ வசதிகளும் இல்லை. பிழைத்தால் உயிரோடு இருக்க முடியும். இல்லையென்றால் அவ்வளவுதான். அவர்களுக்கு என்று ரேஷன் கார்டு கிடையாது, பாஸ் போர்ட் கிடையாது. அவர்களுக்கு என்று எந்த அடையாளமும் கிடையாது. இப்படிப்பட்ட நிலையில் அவர்களுக்கு என ரேஷன் கார்டு, அங்கீகாரங்களை இந்தியாவிலேயே முதன் முறையாக தந்தவர் தலைவர் கலைஞர்.

அதேபோல மாற்றுத் திறனாளிகளை இந்த சமூகம் எப்படி கொச்சைப்படுத்தி வந்திருக்கிறது என்று நமக்குத் தெரியும். ஒரு முறை ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது மாற்றுத் திறனாளிகள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேரணியாக வருகிறார்கள். நான் அவர்களோடு செயலாற்றிக் கொண்டிருந்த நிலையில் என்னை அழைத்த தலைவர் கலைஞர், ‘அவர்களின் கோரிக்கை என்ன?’ என்று கேட்டார். நானும் அவர்களோடு தொடர்பு கொண்டு பேசிவிட்டு முதலமைச்சரிடம் தெரிவித்தேன். நாடே கொண்டாடக் கூடிய முதலமைச்சர், அவர்கள் கோட்டை வரை பேரணியாக வரட்டும். நான் அவர்களுக்காக காத்திருக்கிறேன். என்னைச் சந்திக்கட்டும்’ என்று சொன்னார்.

லைட் ஹவுஸில் இருந்து அவர்கள் நடந்து கோட்டைக்கு வந்து சேரும் வரை அவர் காத்திருந்தார். தன்னோடு அனைத்துத் துறை அதிகாரிகளையும் இருக்க வைத்தார். அவர்கள் கோட்டைக்கு வந்து தங்கள் கோரிக்கைகளை சொன்னதும் அவற்றில் ஒன்றிரண்டை தவிர மற்ற அனைத்தையும் பத்து நிமிடங்களில் நிறைவேற்றித் தந்த ஒரே தலைவர் கலைஞர். இதுதான் தாய் மனம்,

கலைஞர் இல்லாத இடமே இல்லை!

எதையும் எதிர்பார்க்காமல் தேர்தல் வெற்றி, தோல்வி எதைப் பற்றியும் கவலைப்படாமல், மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக வாழ்ந்தவர் கலைஞர். எந்த நேரத்திலும் மக்களை விட்டுக் கொடுக்காதவர். எமர்ஜென்சி பற்றி பேசுகிறோம். இன்றைக்கு முதலமைச்சராக இருக்கும் தளபதி சிறைக்கு அனுப்பப்படுகிறார். ஜனநாயகத்தின் மிகப்பெரிய தூண்கள் சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். ஆனால் இந்த நாட்டுக்குத் தேவை என்கிறபோது இத்தனை இன்னல்களையும் சந்தித்த பிறகும் இந்த நாடு முக்கியம் என்று கருதி ‘நேருவின் மகளே வருக’ என்று கூறினார். தன்னைத் தாண்டி இந்த நாடு முக்கியம், மக்கள் முக்கியம் என்று கருதியவர் தலைவர் கலைஞர். அதனால்தான் அவர் காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, ‘எழுந்து வா தலைவா...எழுந்து வா தலைவா’ என்ற குரல்கள் எழுந்துகொண்டே இருந்தன.

நான் சில நேரம் நினைப்பேன்... அந்த கதவுகளை திறந்துவிட்டிருந்தால் உடன்பிறப்புகளை உள்ளே விட்டிருந்தால் அந்த குரல்களைக் கேட்டு அவர் நிச்சயம் எழுந்து வந்திருப்பார். உடன்பிறப்புகளின் கட்டளையை அவரால் தட்டியிருக்க முடியாது.

அவர் இல்லாத நிலையிலும் எந்த திசையில் திரும்பினாலும் கலைஞர் இல்லாத இடமே இல்லை என்ற நிலை. இங்கு வரும் வழியில் கூட புதிய தலைமுறை தொலைக்காட்சி ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. ‘அண்ணா மேம்பாலத்தின் ஐம்பதாம் ஆண்டு விழா’தான் அந்த நிகழ்ச்சி. அந்த மேம்பாலத்தைக் கட்டியவர் தலைவர் கலைஞர். அந்த மேம்பாலத்தைக் கட்டும்போது இந்தியாவில் கட்டப்பட்ட மூன்றாவது மேம்பாலம் அண்ணா மேம்பாலம். அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே அதிக நீளமாக கட்டப்பட்ட மேம்பாலம். என்னுடைய தொகுதியில் தூத்துக்குடி விமான நிலையம் அருகே ஒரு மேம்பாலம் பல ஆண்டுகளாக கட்டப்படுகிறது. அது ஒன்றிய அரசு கட்டும் மேம்பாலம். அதைக் கட்டி முடிப்பதற்குள் அந்த கான்ட்ராக்டரோடு போராட்டம் நடத்தி இப்போதுதான் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அண்ணா மேம்பாலம் கட்டிமுடிக்கப்பட வேண்டிய காலகட்டத்துக்கு முன்பே கட்டி முடிக்கப்பட்டது.

1973 இல் அதை 12 ஆயிரம் வண்டிகள் பயன்படுத்தின. இன்று லட்சக்கணக்கான வாகனங்கள் அந்த மேம்பாலத்தைப் பயன்படுத்துகின்றன. இன்றும் பயன்படுத்தக் கூடிய வகையில் இயங்கிக் கொண்டிருக்கும் மேம்பாலத்தை தலைவர் கட்டியிருக்கிறார்.

இன்றைக்கு தமிழ்நாட்டுக்கு பல்வேறு முதலீடுகளை முதலமைச்சர் தளபதி பல்வேறு நாடுகளுக்குச் சென்று ஈர்த்து வந்துகொண்டிருக்கிறார். இதற்கு அடிப்படையாக தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்தியவர் தலைவர் கலைஞர். உள்கட்டமைப்பு இல்லையென்றால் யாரும் முதலீடு செய்ய வரமாட்டார்கள். நமது ஆளுநர், ‘வெளிநாட்டுக்கு போனா முதலீடெல்லாம் வந்துவிடாது’ என்று பேசுகிறார். பிரதமர் போகும் போது இதே கேள்வியை அவர் ஏன் கேட்கவில்லை? நீங்கள் அழைத்தாலும் முதலீடுகள் வரப் போவதில்லை. தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை, மத ரீதியாக, ஜாதி ரீதியாக மக்களை பிரித்தாளும் சூழ்ச்சி செய்து ஒவ்வொரு நாளும் அதற்காக துடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

கலைஞருக்கு நாம் செலுத்தும் புகழஞ்சலி!

நாடாளுமன்றம் தொடங்க இருக்கும் நிலையில் பொது சிவில் சட்டம் பற்றி பேசுகிறார் பிரதமர் மோடி. நமது தலைவர் தளபதி அவர்கள் அதை எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறார். பிரதமருக்கு நாடாளுமன்றம், அரசியலமைப்பு சட்டம் மீது மரியாதை கிடையாது, மக்கள் மீது மரியாதை கிடையாது. அப்படி இருக்கக் கூடிய ஒரு ஆட்சி பிரச்சினைகளை உருவாக்கி காழ்ப்புணர்ச்சியை உருவாக்கி, ஒருவரை ஒருவர் வெறுப்புக்கு ஆளாக்கி வரக் கூடிய தேர்தலில் வெற்றி பெறலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இந்த நாடு இன்று விழித்துக் கொண்டது. தமிழ்நாடு எப்போதுமே விழித்துக் கொண்டிருக்கிறது. இங்கே அவர்களை ஒதுக்கியே வைத்திருக்கிறோம்.

தலைவர் கலைஞர் உருவாக்கித் தந்த பாதையில் அவரது ஆட்சியின் நீட்சியாக இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார் தளபதி. ஒன்றியத்தில் மறுபடியும் ஆட்சிக்கு வரலாம் என்று கனவு கண்டுகொண்டிருப்பவர்களுக்கு ஒன்று தெரிவிக்கிறேன். பாட்னாவில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டம் நடந்திருக்கிறது. அடுத்த கூட்டம் பெங்களூருவில் நடக்க இருக்கிறது. அதையும் உடைப்பதற்கு மகாராஷ்டிராவில் ஒரு கட்சியையே பிளவுபடுத்தி ஒற்றுமையை கலைத்துவிடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறீர்கள்.

தளபதி அதற்கு எதிராக குரல் கொடுத்திருக்கிறார். எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை யாராலும் தடுக்க முடியாது. தமிழ்நாடு கண்டுகொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சி, சமூக நீதிக்கான ஆட்சி, அத்தனை சமூகங்களுக்கும் மரியாதை தரும் ஆட்சி, அத்தனை மாநிலங்களையும் மதிக்கும் ஆட்சி ஒன்றியத்திலேயும் உருவாகும். அது தான் தலைவர் கலைஞருக்கு அவரது நூற்றாண்டிலே நாம் செலுத்தக் கூடிய மிகப்பெரிய புகழஞ்சலியாக இருக்கும்” என்று சிறப்புரையை நிறைவு செய்தார் கனிமொழி கருணாநிதி எம்பி.

நிகழ்வில் அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், திரைப்பட நடிகரும், கவிஞருமான ஜோ.மல்லூரி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

சென்னை – ரிப்பன் கட்டட வளாகத்தில்

உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு நிகழ்ச்சி!

மேயர் திருமதி. ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூலை 13- உலக மக்கள் தொகை தினமான ஜூலை 11ஆம் நாளை உலக மக்களுக்கு உணர்த்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை அந்நாளை “உலக மக்கள் தொகை தினம்” என்று அறிவித்து, பெருகி வரும் மக்கள் தொகையினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மக்கள் விழிப்பு ணர்வு பெற ஆண்டுதோறும் ஜூலை மாதம் 11ஆம் நாள் உலக மக்கள் தொகை தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவச் சேவைகள் துறையின் சார்பில் மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையில் உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று முன்தினம் (11.07.2023) ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மேயர் தலைமையில் குடும்பநல உறுதிமொழியினை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மூன்று மாணவியருக்கு மேயர் பிரியா பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

மேலும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், குடும்ப நலக்கட்டுப்பாட்டு முறைகள் (தற்காலிக மற்றும் நிரந்தர) குறித்து மக்களுக்கு தெரிவிக்கும் வகையிலான மூன்று விழிப்புணர்வு வாகனங்களை மேயர் பிரியா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதா கிருஷ்ணன், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ்.பானுமதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் தெற்கு மாவட்டம்

பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் முடிவு

தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆ.இராமலிங்கம், அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவர் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால்; திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2023, ஜூலை 12 (புதன்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு திரு.என்.ராமசாமி அவர்கள் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக, திரு. என்.ராமசாமி, எண்.998, கணியூர் மெயின் ரோடு, ஜோத்தம்பட்டி அஞ்சல், மடத்துக்குளம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம் 642 203. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 12.07.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்!

அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைக்கிறார்! வாகை சந்திரசேகர் - செந்தலை ந.கவுதமன் சிறப்புரை!

பொள்ளாச்சி, ஜூலை 13- கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் நாளை (14.7.2023-வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு பொள்ளாச்சிலாரிஉரிமையாளர்கள் திருமண மண்டபத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமை வகிக்கிறார்.

மாவட்ட இளைஞர்அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் அனைவரையும் வரவேற்புப் பேசுகிறார்.

நகர செயலாளர் இரா.நவநீத கிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ச.புவனேஷ், சல்மான்கான் நாசர், கே.சபரிகிருஷ்ணன், வி.ஆர். நிஷாந்த், இருகூர் உதயபூபதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கருத்தரங்கை கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சர் சு.முத்துசாமி துவக்கிவைக்கிறார்.

‘கலை உலகம் கலைஞர்’ என்ற தலைப்பில் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவரும் நடிகருமான வாகை சந்திரசேகரும், ‘கோவைதந்தகலைஞர்’என்ற தலைப்பில் புலவர் செந்தலை ந.கவுதமன் ஆகியோர் கருத்துரை வழங்குகின்றனர்.

இதில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் கே. இ.பிரகாஷ், கு.சண்முக சுந்தரம் எம்.பி., கழக சட்ட திட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், மருத்துவர்கி.வரதராஜ், டாக்டர் ஆர்.மகேந்திரன், இரா.தமிழ்மணி, திப்பம்பட்டி ஆறுச்சாமி, ஜி.ஏ.அதிபதி, பொள்ளாச்சி சித்திக், கே.எம்.நாகராஜ், பனப்பட்டி தினகரன், வி.பி.சந்திரசேகர், எம்.அமுதபாரதி, மு.க.முத்து, கோழிக்கடை ந.கணேசன், ஏர்போர்ட் ராஜேந்திரன், கே.வி.சுப்பிரமணியம், பா.க.சாமிநாதன், சி.பொன் னு ச்சாமி, செ.கனிமொழி, எஸ்.ஜெயப்பிரகாஷ், சியாமளா நவநீதகிருஷ்ணன், எஸ்.கௌதமன், கோ.பால கிருஷ்ணன், எஸ்.ஜெயக்குமார், எஸ்.ஆர். அண்ணாதுரை, ஏ.ஆர்.வி.சாந்தலிங்ககுமார், ஜெ.மஞ்சு சௌமியா, மாணிக்கவேல், சாதிக் அலி, மா.சண்முகம், மருதராஜ், என்.கண்ணுசாமி, வி.பி.கிரி, பி.ஏ. செந்தில்குமார், சிட்டி டி.வி.உசேன் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் செய்துள்ளார். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பா.திருமலைராஜாநன்றி கூறுகிறார்.